# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2484 - 2026 අප්‍රේල් මස 10 වැනි සිකුරාදා - 2026.04.10**

2484 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க** - (1) அல் - ஹாஷிமி சங்கம் ( கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2026.04.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(2) மாஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2026.04.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கோறளைப்பற்று பிரதேச சபை - வாழைச்சேனை**

வியாபார உரிமக் கட்டண அறிவித்தல் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 147 மற்றும் 149 ஆம் பிரிவுகளுடன் சேர்ந்து வாசிக்கப்படும் தத்துவங்களின் பிரகாரம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் அடிப்படையில் சுற்றுலா அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்கள் மற்றும் விடுதிகளுக்கான வியாபார உரிமக் கட்டணமாக கோறளைப்பற்று பிரதேச சபை பின்வரும் நடைமுறையினை பின்பற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் மொத்த பெறுகை வருமானத்தில் ஒரு வீதம் (1%) 2026 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமக் கட்டணமாக அறவீடு செய்வதற்கு 2026.01.22 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த சபை அமர்வில் 2026/01/22/148 ஆம் இலக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை இத்தால் சுற்றுலா அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல் மற்றும் விடுதி உரிமையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

சு. சுதாகரன்,
தவிசாளர்.

கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை.

04-133

---

**பன்வில பிரதேச சபை**

நிருவாகப் பிரிவுக்குள் புதிய முச்சக்கவண்டி தரிப்பிடத்தை ஸ்தாபித்தல் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 12 ஆவது பிரிவுகளின் கீழ் பன்வில பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, 2025.12.10 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொதுச்சபைக் கூட்டத்தில் (இ)01.(01)(XII) என்ற தீர்மான இலக்கத்தின் கீழ் பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

பீ. கே. டி. அனுர ஷாந்த,
தவிசாளர்,
பன்வில பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பன்வில,
2026, மாச்சு 23.

**தீர்மானம்**

அங்கம்மன கிளாஸ்டவுண் பிரதான சந்தியில் முச்சக்கர வண்டிகள் தரிப்பிடம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கென அனுமதி கோரி மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் எமது பிரதேச சபை விடுத்த வேண்டுதலுக்கு அமைய, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் பாதையின் நடு அச்சிலிருந்து 25 அடி தூரத்தில் அவர்களுக்கு உரித்தான பாதையில் தடைகள் ஏற்படாத வண்ணம் தரிப்பிடம் ஒன்றை அமைக்குமாறு 2025.09.23 ஆம் திகதி கொண்ட கடிதத்தின் மூலம் அனுமதி வழங்கியுள்ளார். அதற்கமைய எமது பிரதேச சபையின் தொழில் நுட்ப அலுவலரும் வருமானப் பரிசோதகரும் குறித்த களப் பரிசோதனையை மேற்கொண்டு, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான உடுகொட - வத்தேகம பாதையின் நடு அச்சிலிருந்து 25 அடி தூரத்தில் உடுகொடவத்த பிரதேச சபையின் பாதையின் நீளப்பாட்டில் முச்சக்கர வண்டித்

தரிப்பிடத்தை அமைப்பது பொருத்தமெனவும், ஒரு தடவையில் 3 முச்சக்கர வண்டிகள் மட்டும் நிறுத்தி வைப்பது பொருத்தமெனவும் பரிந்துரைத்துள்ளளர். அதற்கமைய, குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு அங்கம்மன கிளாஸ்டவுண் பிரதான சந்தியில் முச்சக்கர வண்டிகள் தரிப்பிடத்தை வர்த்தமானியில் வெளியிடுவது பொருத்தமென முன்மொழிகின்றேன்.

| *தொடர் இல.* | *முச்சக்கர வண்டி தரிப்பிடம்* | *நீளம் (m)* | *அகலம் (m)* | *ஒரு தடவையில் நிறுத்தி வைக்க இயலுமான முச்சக்கர வண்டிகள் தொகை* | *அனுமதி வழங்க இயலுமான முச்சக்கர வண்டிகள் தொகை* | *ஏனையவை* |
|---|---|---|---|---|---|---|
| 01 | அங்கம்மன கிளாஸ் டவுண் பிரதான சந்தியில் | 7.5 | 1.5 | 03 | 06 | உடுகொட - வத்தேகம பாதையின் நடுவில் இருந்து 25 அடி தூரத்தில் உடுகொடவத்த பிரதேச சபைப் பாதையின் நீளப்பாட்டில் நிறுத்துவது பொருத்தமாகும் |

04-152

---

**கெஸ்பேவ மாநகர சபை**

1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, நகர சபை கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயமான பிரிவு 52 இன் கீழ் அறிவித்தல்

1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, நகர சபை கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயமான பிரிவு 52 இன் அடிப்படையில் மேல்மாகாணத்தின் கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலகத்தின் கெஸ்பேவ மாநகர சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள இணைக்கப்பட்ட உப ஆவணத்தில் 1 முதல் 5 வரையான இலக்கம் கொண்ட வீதிகள் கெஸ்பேவ மாநகர சபைக்கு சொந்தமானவை மற்றும் கட்டுப்பாட்டில் உள்ளவை என்பது மக்களின் அறிவிற்காக பிரசுரிக்கப்படுகிறது.

| *தொடர் இல.* | *வீதியின் பெயர்* | *வீதியின் நீளம்* | *வீதியின் அகலம்* | *ஆரம்ப வரி மதிப்பீட்டு எண்* | *இறுதி வரி மதிப்பீட்டு எண்* |
|---|---|---|---|---|---|
| 01. | 597 ஜம்புரலிய கிராம உத்தியோகத்தர் பிரிவில், வாவி மேல் வீதியில் அரலிய மாவத்தை | மீட்டர் 209 | மீட்டர் 3.0/4.8 | 086/1 | 086/60 086/17 |
| 02. | 384/ஏ நாம்பமுணுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் குமுது மாவத்தையில் முதலாம் ஒழுங்கை | மீட்டர் 181.0 | மீட்டர் 4.5/3.3 | 93/97 | 91/37 |
| 03. | 597 ஜம்புரலிய கிராம உத்தியோகத்தர் பிரிவில், விகாரை வீதியில் சந்துன் பூங்கா வீதி | மீட்டர் 71 | மீட்டர் 6 | 046 | 39/17 |
| 04. | 569/ஏ மாகந்தன மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில், பாடசாலை மாவத்தையில், தகம் மாவத்தை | மீட்டர் 86 | மீட்டர் 4.5 | 107 | 107/3 |
| 05. | 569 மாகந்தன மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தெஹெமி மாவத்தையில், 4 ஆம் ஒழுங்கை | மீட்டர் 105.6 | மீட்டர் 3.0 | 109 | 103/06 |

தலைவர்,
கெஸ்பேவ மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கெஸ்பேவ,
2026, மாச்சு 20.

04-153

**பாணத்துறை பிரதேச சபை**

களியாட்ட வரி திருத்தஞ் செய்தல் தொடர்பாக

பாணந்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட வாத்துவ விஜயகுமாரதுங்க மண்டபத்திற்காக தற்போது அறவிடப்படும் 25% களியாட்ட வரியை 15% ஆக குறைத்து 10% ஆக அறவிடுவதற்கு 2026.01.14 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எல். எச். என். சன்ஜய பெர்ணாந்து,
செயலாளர்,
பாணந்துறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பாணந்துறை,
2026, மாச்சு 16.

04-82

---

# நானாவித அறிவித்தல்கள்

**அம்பகமுவ பிரதேச சபை**

வாகன நிறுத்துமிடங்களை அமைத்தல் மற்றும் வாகன நிறுத்துமிடத்திற்கு கட்டணம் அறவிடுதல்

பின்வரும் முன்மொழிவு அம்பகமுவ பிரதேச சபையால் 2026, மாச்சு மாதம் 19 ஆம் திகதி தீர்மானம் இல. 09 இன் கீழ் நிறைவேற்றப்பட்டது என்று இதன்மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

என்.டி. கபில நாகந்தல,
தவிசாளர்,
அம்பகமுவ பிரதேச சபை,
கினிகத்ஹேனை.

பிரதேச சபை அலுவலகம்,
அம்பகமுவ,
2026, மாச்சு 23.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தினாலும் மற்றும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் (தராதர உப-விதிகள்) சட்டத்தின் வாகனங்களை நிறுத்தி வைத்தல் தொடர்பான உப-விதியினூடாகவும் அம்பகமுவ பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வாகனத் தரிப்பிடங்களை அமைத்தல் மற்றும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணங்களை நிர்ணயம் செய்தல் ஆகியவற்றை பின்வருமாறு மேற்கொள்வதற்கும், அதனை 2026, ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானிக்கின்றேன்.

வாகன நிறுத்துமிடங்கள்

| *தொடர் இலக்கம்* | *இடம்* | *கூகுள் வரைபட ஆள்கூறுகள்* |
|---|---|---|
| 01. | கினிகத்தேனை நகரத்தில் ஹட்டன் வீதி பிரகாஸ் மொபைல் நிறுவனத்திற்கு அருகிலிருந்து ஹட்டன் வீதியிலுள்ள பி. எம். எல் பினான்ஸ் நிறுவனம் வரையிலான வீதியின் இடது பக்க பகுதி. | 6.98858,80.49534 முதல் 6.98731,80.49593 வரை |
| 02. | கினிகத்தேனை பேருந்து நிலையத்தின் முன்புறப் பகுதி | 6.990044,80.493110முதல் 6.989474,80.492467 வரை |
| 03. | கினிகத்தேனை கொழும்பு வீதி, பொலிஸ் நிலையத்திற்கு அருகிலிருந்து வில்சன் (Wilson) கட்டிடம் வரையிலான வீதியின் வலது பக்க பகுதி. | 6.989049,80.494155 முதல் 6.989191,80.493378 வரை |
| 04. | வட்டவளை நகர பிரதான வீதியின் இருமருங்கிலும். | - |
| 05. | லக்ஷபான நீர்வீழ்ச்சி நுழைவாயிலுக்கு அருகிலுள்ள கடை வீதியின் இருமருங்கிலும். | - |

வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணங்கள்

| *வாகன வகை* | *முதல் மணித்தியாலத்திற்கும் (ரூபா)* | *அதிகரிக்கும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அல்லது ஒரு பகுதிக்கு (ரூபா)* |
|---|---|---|
| 1. பஸ் வண்டிகள் / லொறிகள் /டிராக்டர்கள் / கனரக வாகனங்கள் | 100.00 | 50.00 |
| II. வான் வண்டிகள் / கார்கள் / கெப் (Cab) வண்டிகள் / முச்சக்கர வண்டிகள் /இலகுரக வாகனங்கள் மற்றும் கைவண்டிகள் | 50.00 | 25.00 |
| III. மோட்டார் சைக்கிள்கள் / துவிச்சக்கர வண்டிகள் | 20.00 | 10.00 |
| IV. ஏனைய வாகனங்கள் | 100.00 | 50.00 |

04-168

---

**பாணந்துறை பிரதேச சபை**

கல் ரோலருக்கான கட்டண திருத்தம்

பாணந்துறை பிரதேச சபையின் கல் ரோலருக்காக தற்போது ஒரு நாளுக்கு ரூபா 12,000.00 என்ற வாடகை கட்டணம் அறவிடப்பட்டு வருவதாகவும், இதனை ரூபா 20,000.00 வரை திருத்துவதற்கு 2026.01.14 அன்று நடைபெற்ற பொதுச் சபை கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டது.

எல். எச். என். சன்ஜய பெர்ணாந்து,
செயலாளர்,
பாணந்துறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பாணந்துறை,
2026, மாச்சு 13.

04-69